

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.3.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தருமபுரி கிழக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தருமபுரி கிழக்கு மாவட்ட முன்னாள் செயலாளர் தடங்கம் சுப்பிரமணி ,கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, முன்னாள் எம்.பி. செந்தில் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு கேந்திரிய வித்யாலயாக்களில் பணிபுரியும்

# தமிழ், இந்தி, சமஸ்கிருத ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்விக்கு ஒன்றிய கல்வி அமைச்சர் பதில்!

புதுடெல்லி, மார்ச் 26 -

தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. கல்வித் துறை தொடர்பான சில முக்கிய வினாக்களை எழுத்துபூர்வமாக கேட்டிருந்தார்.



“நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் மும்மொழிக் கொள்கையின் கீழ் கற்பிக்கப்படும் மொழிகளின் விவரங்கள் மாநில வாரியாக என்னென்ன?

இந்த மொழிகளைப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள்;

இந்தி பேசும் மாநிலங்களில் இந்தி அல்லாத இந்திய மொழிகளைப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள் மாநில வாரியாக என்ன?

தமிழ்நாட்டில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தற்போது பணிபுரியும் தமிழ், இந்தி மற்றும் சமஸ்கிருத ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மாணவர்களுக்கு அந்தந்த தாய்மொழிகளில் கற்பிக்க கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் ஏதேனும் திட்டங்கள் வகுத்துள்ளனவா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள்?”

ஆகிய இக்கேள்விகளுக்கு ஒன்றிய கல்வித் துறையின் இணையமைச்சர் ஜெயந்த் சௌதரி அளித்த பதில் வருமாறு:-

“தேசிய கல்விக் கொள்கையின் பத்தி 4.13 இல், அரசியலமைப்பு விதிகளைக் கருத்தில்க் கொண்டு மக்கள், மாநிலங்கள் மற்றும் ஒன்றியத்தின் விருப்ப ங்களை மற்றும் பன்மொழித் தன்மையை மேம்படுத்துவதன் அவசியத்தையும், தேசிய ஒற்றுமையை மேம்படுத்துவதையும் மனதில் கொண்டு மும்மொழிக் கொள்கை தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று கூறுகிறது.

எனினும், மும்மொழிக் கொள்கை அதிக நெகிழ்வுத் தன்மையுடையதாக இருக்கிறது. அதாவது எந்த மாநிலத்தின் மீதும் எந்த மொழியும் திணிக்கப்ப டாது. மூன்று மொழிகளில் குறைந்தது இரண்டு இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டதாக இருக்கும் வரை குழந்தைகள் கற்றுக் கொள்ளும் மூன்று மொழிகளும் மாநிலங்களுடைய தேர்வாகவும் இன்னும் சொல்லப் போனால் நிச்சயமாக மாணவர்களின் விருப்பங்களாக இருக்கும்,

குறிப்பாக, தாங்கள் படிக்கும் மூன்று மொழிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றை மாற்ற விரும்பும் மாணவர்கள், மேல்நிலைப்பள்ளியின் இறுதிக்குள் (இலக்கிய மட்டத்தில் இந்தியாவின் ஒரு மொழி உட்பட) அடிப்படைத் தேர்ச்சியை நிரூபிக்க முடிந்தால், 6 அல்லது 7 ஆம் வகுப்பில் அவ்வாறு செய்யலாம்.

NEP 2020 இன் தொடர்ச்சியாக, பள்ளிக் கல்விக்கான தேசிய பாடத்திட்டக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது இது இந்தியாவில் மொழிக் கல்வி குறித்த முன்னோக்குகளுக்கான வழிகாட்டுதலை வழங்குகிறது.

உத்திரப்பிரதேச மாநிலத்தில் ஒருமொழி பயிற்றுவிக்கும் 23280 பள்ளிகளும், இரு மொழி பயிற்றுவிக்கும் 20693 பள்ளிகளும், மும்மொழி பயிற்றுவிக்கும் 211114 பள்ளிகளும் இயங்கி வருகின்றன. மத்திய பிரதேச மாநிலத்தில் ஒரு மொழி பயிற்றுவிக்கும் 11428 பள்ளிகளும் , இருமொழி பயிற்றுவிக்கும் 43596 பள்ளிகளும், மும்மொழி பயிற்றுவிக்கும் 68388 பள்ளிகளும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் ஒரு மொழி பயிற்றுவிக்கும் 21725 பள்ளிகளும், இரு மொழி பயிற்றுவிக்கும் 35092 பள்ளிகளும், மும்மொழி பயிற்றுவிக்கும் 1905 பள்ளிகளும் இயங்கி வருகின்றன. கல்வி உரிமைச் சட்டத்தில் (RTE) வரையறுக்கப்பட்டுள்ளபடி கேந்திரிய வித்யாலயாக்களுக்களுக்கு “குறிப்பிட்ட வகை” என்ற அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகள் சீரான கல்வித் திட்டத்தைக் கொண்டிருக்க வேண் டும் என்ற கட்டளையுடன் நிறுவப்பட்டுள்ளன.

எனவே, அனுமதிக்கப்பட்ட மொழி ஆசிரியர் பதவிகள் இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதம் மட்டுமே. இருப்பினும், கேந்திரிய வித்யாலயாவிற்கான கல்விச் சட்டத்தின் பிரிவு 112 இன் படி, ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை விருப்பமுள்ள மாணவர்களுக்கு பிற மொழிகளைக் கற்பிப்பதற்கான ஒரு வழிமுறை உள்ளது. இந்த விதியின்படி, 15 அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்கள் தேர்வுசெய்தால், ஒரு ஆசிரியரை பகுதி நேர ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தலாம்.

தமிழ்நாட்டில் கேந்திரிய வித்யாலயாக்களில் தமிழ் கற்பிப்பதற்காக பகுதி நேர ஒப்பந்த அடிப்படையில் 24 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். கூடுதலாக, 21 கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் மொழியை கற்க ஆர்வமுள்ள மாணவர்களுக்காக தமிழ்நாட்டில் உள்ள ஒரு தன்னாட்சி அமைப்பான தமிழ் மெய்நிகர் அகாடமி (TVA) மூலம் மேற்கொள்ளப்படுகிறது. தற்போது தமிழ்நாட்டில் 86 இந்தி மற்றும் 65 சமஸ்கிருத ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர்” என்று பதிலளித்துள்ளார்.


### 100 நாள் வேலைத் திட்டத்தில்

# மனிதசக்தி நாட்களை ஒன்றிய அரசு குறைத்துள்ளது!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் இ.பெரியசாமி தகவல்!

**சென்னை, மார்ச். 26 -**

**சட்டப் பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் பி.தங்கமணி பேசும் போது குறுக்கிட்டுப் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, 100 நாள் வேலை திட்டத்தில் மனித சக்தி நாட்களை ஒன்றிய அரசு குறைத்தி ருக்கிறது என்று குறிப்பிட்டார்.**



சட்டப் பேரவையில் இ. பெரியசாமி பேசியதாவது:-

உறுப்பினர் தங்கமணி அவர்கள், 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்திற்கு மாநில அரசு பணம் விடுவிக்க வேண்டும் என்று கூறுகிறார். சுமார் 4 ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்க வேண்டியிருக்கிறது. இதற்கான தொகையை ஒன்றிய அரசுதான் வழங்க வேண்டும். வேலைக்கு ஊதியம் 100 சதவிகிதம் ஒன்றிய அரசுதான் வழங்க வேண்டும். அதில் கிட்டத்தட்ட 2,900/- கோடி ரூபாயும், பொருள் உட்கூறு என்று asset உருவாக்குவதில் அதில் ரூ.900 கோடியும் சேர்த்து கிட்டத்தட்ட ரூ.4,000/- கோடி, அதாவது ரூ.3,900/- கோடி கொடுக்க வேண்டியிருக்கிறது. நான் ஏற்கெனவே நேற்றே சொன்னேன். கடந்த ஆண்டு மார்ச் மாதம் சுமார் ரூ.1,700/- கோடி ஒன்றிய அரசு விடுவிக்காமல் இருந்துவிட்டு, ஏப்ரல் மாதம்தான் விடுவித்தது. இவ்வாறு ஏப்ரல் மாதம் விடுவித்து, இந்த ஆண்டு நிதியை ஒன்றிய அரசு குறைத்திருக்கிறது.

அதேமாதிரி தற்போது வரவிருக்கிற ரூ.4,000/- கோடி இன்றைக்கு தேதி 20 ஆகிவிட்டது. இன்னும் 10 நாட்கள் கழித்து ஒன்றிய அரசு இதற்கான தொகையை விடுவிக்கும். விடுவித்து விட்டு வருகின்ற நிதியா ண்டிற்கு 2025-2026-க்கு மொத்தம் 12 கோடி மனிதசக்தி நாட்கள்தான் ஒன்றிய அரசு ஒதுக்கியிருக்கிறது. தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் வேலை உறுதி நாட்களை, மனிதசக்தி நாட்களை எல்லா மாநிலங்களுக்கும் ஒன்றிய அரசு குறைத்திருக்கிறது. அதைத்தான் சொல்கிறோம். அடுத்த ஆண்டு கொடுப்பார்கள். உங்களுக்குத் தெரியாதது இல்லை. நிச்சயமாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட த்திற்கு நிதி மத்திய அரசு கொடுத்துதான் ஆக வேண்டும். ஒன்றிய அரசு நிதியை கொடுத்தவுடன் நாங்கள் அந்த பணத்தை விடுவிப்போம்.

உறுப்பினர் தங்கமணி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கிட்டத்தட்ட 1 கோடி நபர்களுக்கு இந்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் நேரடியாக அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. அவர்களுக்கு வங்கி கணக்கு இருக்கிறது. நிதி வந்தவுடன் நேரடியாக, அங்கிருந்தே அவர்க ளது வங்கிக் கணக்கிற்கே நேரடியாக செலுத்தப்படும். நாங்கள் பணத்தை மாநில சர்க்காருக்கு வந்து, நாங்கள் பிரித்து கொடுப்பதில்லை. எல்லா பணமும் நேரடியாக அந்தந்த வங்கிக் கணக்கிற்கே ஒரு கோடி நபர்களுக்கும் செலுத்தப்படும். அது உங்களுக்கு தெரியாது அல்லவா? பத்தாண்டு காலம் நீங்கள் ஆட்சியில் இருந்தீர்கள். நூறு நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பற்றி தெரியாதா? நூறு நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தைப் பற்றி பேச வேண்டிய அவசியம் என்ன? நீங்கள்தான் கூட்டணியில் இருக்கிறீர்களே! அவர்களிடம் சொல்லி, கொடுக்கச் சொல்லுங்கள்.

இவ்வாறு அமைச்சர் இ. பெரியசாமி பேசினார்.

# மர்மமான சிந்து எழுத்துகளைப் புரிந்து கொள்ள ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் – தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 26 -

மர்மமான சிந்து எழுத்துக்களை புரிந்து கொள்ள ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்பது உள்ளிட்ட தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியனின் கேள்விகளுக்கு ஒன்றிய அமைச்சர் பதில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற மக்களவையில், “கி.மு. 2500 க்கு முந்தைய இரும்பு யுகத்துக்கான பொருள் ஆதாரங்களை வெளிக்கொணர தமிழ்நாட்டின் பண்டைய இடங்களில் கிடைமட்ட அகழ்வாராய்ச்சி நடத்த இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறையிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?,

அப்படியானால், அதன் விவரங்கள் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன? மர்மமான சிந்து எழுத்துக்களைப் புரிந்து கொ ள்வதை ஊக்குவிக்கவும், திராவிட கலாசாரத்தின் தொன்மையான பிராமியுடன் அதன் உறவை இணைக்கவும் மத்திய அரசிடம் திட்டம் உள்ளதா?, அப்படியானால், அதன் விவரங்கள், இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?, தமிழ்நாட்டிலும், நாட்டின் பிற மாநிலங்களிலும், இலங்கை, எகிப்து, சீனா, மலேசியா, தாய்லாந்து, கம்போடியா மற்றும் இந்தோனேசியா போன்ற வெளிநாடுகளிலும் காணப்படும் தொன்மையான பிராமி கல்வெட்டுகளை புரிந்து கொள்வதற்கும், பதிவு செய்வதற்கும் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?” ஆகிய கேள்விகளை தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. மக்களவையில் கேட்டிருந்தார். இதற்கு ஒன்றிய கலாசாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் எழுத்துப்பூர்வமாக பதிலளித்தார். அந்த பதிலின் விவரம் வருமாறு:



தமிழ்நாட்டின் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அமூரில் கற்கால நீர்த்தேக்கங்கள் மற்றும் கற்குவியல்களை இந்திய தொல்பொருள் ஆய்வு மையம் அகழ்வாராய்ச்சி செய்து வருகிறது. இந்த அகழ்வாராய்ச்சியில் இருந்து இதுவரை எந்த அறிவியல் விஷயமும் பெறப்படவில்லை. மேலும், தமிழக அரசின் பரிந்துரையின் பேரில் மாநிலத்தில் 10 தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளுக்கு இந்திய அரசும் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்திரா காந்தி தேசிய கலை மையம் மூலம் கலாசார அமைச்சகம் சிந்து எழுத்துக்களைப் புரிந்துகொள்வதற்கும், பிற பண்டைய எழுத்துக்களுடனான அதன் தொடர்புகளை ஆராய்வதற்கும் சில முயற்சிகளை எடுத்துள்ளது. சிந்து எழுத்துக்களைப் புரிந்து கொள்வதற்கான ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளில் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல் மற்றும் தொடர்புடைய படைப்புகளை வெளியிடுதல் போன்றவை அடங்கும். இந்திய தொல்பொருள் ஆய்வு மையத்தின் கல்வெட்டுப் பிரிவின் முக்கிய நோக்கம் பண்டைய எழுத்துக்களைப் படிப்பதும், இந்த பகுதியில் ஆராய்ச்சியை மேம்படுத்துவதும் ஆகும்.

தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களில் காணப்படும் தொன்மையான பிராமி கல்வெட்டுகள் உள்ளிட்ட கல்வெட்டுகளை நகலெடுப்பதற்காக இந்திய தொல்பொருள் ஆய்வு மையத்தின் கல்வெட்டுப் பிரிவு தொடர்ந்து கல்வெட்டு ஆய்வை நடத்தி வருகிறது. கம்போடியா, இலங்கை மற்றும் வியட்நாம் போன்ற வெளிநாடுகளில் உள்ள கல்வெட்டுகளும் கல்வெட்டுப் பிரிவு அறிஞர்களால் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு பதிலில் கூறப்பட்டுள்ளது.

